**மாவட்ட ஆட்சேர்ப்பு நிலையம்**

**திருவண்ணாமலை மண்டலம்**

**உதவியாளர் பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு**

**கொள்குறிவகைத் தேர்வுகள் எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்**

**விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வின்போது கொரோனா (கோவிட்-19) நோய் தொற்று தொடர்பாக கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்.**

- விண்ணப்பதாரர்கள் பின்வரும் பொருட்களைத் தவிர வேறு எந்தப் பொருட்களையும் தேர்வு மையத்திற்குள் எடுத்துச் செல்ல அனுமதி இல்லை.

  - முகக்கவசம் (அணிந்த நிலையில்)
  - கையுறை (அணிந்த நிலையில்)
  - தண்ணீர்பாட்டில்
  - சானிடைசர் ( 50 மில்லி)
  - நுழைவுச்சீட்டு
  - அடையாளச்சான்று
  - விண்ணப்பதார் புகைப்படம்
  - பேனா

- விண்ணப்பதாரர்கள் போதிய (சுமார் 3 அடி) சமூக இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் நுழைவுச் சீட்டில் குறிப்பிட்டுள்ள காலவரையறையைக் கடைபிடிக்க வேண்டும்.
- பதிவெண்ணுக்கு ஏற்ப சமூக இடைவெளியைக் கடைபிடித்து தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வு அறைக்குச் செல்லவேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் கழிவறைக்குச் செல்லும் முன் கண்காணிப்பாளரிடம் அனுமதி பெற வேணடும்.
- விண்ணப்பதாரர்கள் கழிவறையை உபயோகித்துவிட்டு வெளியே செல்லும் முன் கைகளைக் கிருமிநாசினிக் கொண்டு சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

- விண்ணப்பதாரர்களது தனிப்பட்ட குடிநீர் பாட்டில்கள் மட்டுமே தேர்வு மையத்தில் அனுமதிக்கப்படும்.
- எழுத்துத்தேர்வு முடிந்தப் பின்னர் வரிசையாக சமூக இடைவெளி விட்டு தேர்வு மையத்திலிருந்து வெளியேற வேண்டும்.
- தேர்வு மையத்தின் எந்த ஒரு இடத்திலும் கூட்டம் கூடாமல் தனி மனித இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும்,

**<u>நினைவில் கொள்ள வேண்டிய குறிப்புகள்</u>**

**அ) அனுமதிச்சீட்டைத் (Hall Ticket) தேர்வுக் கூடத்திற்கு தவறாமல் எடுத்து வர வேண்டும்**

**ஆ) நீலம் அல்லது கருமை நிற மை கொண்ட பந்து முனைப் பேனாவை (Ball Pen) மட்டுமே தேர்விற்குப் பயன்படுத்த வேண்டும்.**

**இ) பென்சில் கொண்டு நிரப்பப்படும் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.**

**ஈ) OMR விடைத்தாளில் "டிராக்கிங் சைடில்" (Tracking Side) எதுவும் குறிப்பதோ எழுதுவதோ கூடாது. விரிவான அறிவுரைகளுக்கு கீழ்க்கண்ட பத்திகளை தேர்விற்கு முன் கவனமாகப் படித்து கொள்ளவும்.**

1. **விண்ணப்பதாரர் அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள தேர்வு மையத்தின் தேர்வுக் கூடத்தில் தேர்வு எழுத வேண்டும்.**
2. **தேர்வு சம்பந்தப்பட்ட முறைகளை அனுசரிப்பதற்கும் மற்றும் விரிவான அறிவுரைகளைப் பெறும் பொருட்டும் குறித்த நேரத்திற்கு முன்னதாகவே விண்ணப்பதாரர் தனது சொந்தப் பொறுப்பில் தேர்வு நடைபெறும் இடத்தைச் சென்றடைந்து தேர்வு தொடங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்குச் சரியாக 30 நிமிடங்கள் முன்னதாகத் தேர்வுக் கூடத்தில் தங்கள் இருக்கையில் அமர வேண்டும். தேர்வு நேரம்– காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை, கால அளவு – 3 மணி நேரம்.**
3. **விண்ணப்பதாரர் எவரும் எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வு நேரம் முடிவதற்கு முன்பாக தேர்வுக்கூடத்தை விட்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்.**
4. **தேர்வு எழுதுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கால அளவைக் கடந்து விடையளிக்க விண்ணப்பதாரர் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அனுமதிக்கப்பட்மாட்டார்.**
5. **ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி அதன் விளைவாக ஒன்றிற்கு மேற்பட்ட வெவ்வேறு பதிவெண்களைக் கொண்ட அனுமதிச் சீட்டுகள் வரப்பெற்ற விண்ணப்பதாரர்கள் ஒரே ஒரு அனுமதிச் சீட்டை மட்டும் தம்மிடம் வைத்துக் கொண்டு இவ்விவரத்தை தெரிவித்து மற்றவற்றை திருப்பி அனுப்பிட வேண்டும்.**

6. தேர்வில் தோல்வியடைந்ததற்கான காரணத்தைத் தெரிவிக்கக் கோரியோ அல்லது தமது விடைத்தாட்களை மறு மதிப்பீடு செய்யக் கோரியோ விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் எத்தகைய கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
7. எந்தவொரு புத்தகம், குறிப்பேடுகள், அகராதி, அளவுக்கோல் அல்லது வரைவதற்கான உபகரணங்கள், துணுக்குகள், புளூடூத் (Blue Tooth) கருவிகள், கணிப்புக் கருவி, செல்லிடப்பேசி (செல்லுலார் போன்), அகவி (பேஜர்), துண்டுக் காகிதங்கள், பைகள் அல்லது கைப்பெட்டிகள் ஆகிய எவற்றையும் விண்ணப்பதாரர் தேர்வுக்கூடத்திற்குள் கண்டிப்பாக எடுத்துச் செல்லக்கூடாது.
8. பரிசீலனைக்காகக் கேட்கும் அனுமதிச் சீட்டைத் தேர்வுக் கூட கண்காணிப்பாளரிடம் / தலைமை கண்காணிப்பாளரிடம்/ ஆய்வு அலுவலர்களிடம் காண்பிக்க வேண்டும்.
9. விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கூடத்தில் அவருக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்த பின்பு கணிப்பொறியால் தயாரிக்கப்பட்ட வருகைப் பட்டியலில் அவரது ஒப்புகையைப் பெற்றுக் கொண்டு ஒரு OMR விடைத்தாளை தேர்வுக் கூட கண்காணிப்பாளர் அவரிடம் தருவார். விடைத்தாளைப் பெற்றவுடன் அவை சரிவர அச்சடிக்கப்பட்டுள்ளதா என்பதையும் அதற்கு ஓர் எண் இடப்பட்டுள்ளதா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும், அவை எந்த வகையிலேனும் குறைபாடுடையதாக இருந்தால் அவற்றை மாற்றிக் கொடுக்கும்படி கண்காணிப்பாளரிடம் கேட்கவும்.
10. சரியான விடைத்தாளைப் பெற்றவுடன் விண்ணப்பதாரர் அந்த வருகைப் பட்டியலில் உள்ள தன் பெயர், பதிவெண் ஆகியவற்றைச் சரிபார்த்துக் கொண்டு தனக்குத் தரப்பட்டிருக்கும் OMR விடைத்தாளின் எண்ணை அவர் வருகைப் பட்டியலில் உரிய கலத்தில் எழுதி, தன் கையொப்பத்தை இட வேண்டும்.
11. விடைத்தாளை தூசி படாமலும், சிதையாமலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.
12. விடைத்தாளில் உள்ள கட்டளைகளை கவனமாகப் படித்து அதன் இருபுறங்களிலும் கேட்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட விவரங்களை நீலம் அல்லது கருமை நிற பந்து முனைப் பேனாவினால் அவற்றிற்கான இடங்களில் நிரப்பவும். (அ) பதிவெண் (ஆ) தங்கள் பெயர் (பெரிய தெளிவான எழுத்துக்களில்) (இ) தேர்வு மையத்தின் பெயர் (மேற்கண்ட விவரங்களுக்கு அனுமதிச் சீட்டைக் காணவும்)
13. எல்லா விவரங்களையும் கவனமாக நிரப்பியபின் விடைத்தாளில் முதல் பக்கத்தில் அதற்கென உள்ள இடத்தில் உங்கள் கையொப்பத்தை இடவும்.
14. அதன் பிறகு தரப்படும் வினாத்தாளின் முதல் பக்கத்திலுள்ள அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும். வினாக்கள் குறித்த ஐயங்கள் எதுவும் தேர்வுக்கூட கண்காணிப்பாளரால் ஏற்கப்படமாட்டாது.

15. உங்களுடைய பதிவு எண்ணை வினாத்தாளின் அதற்கென அமைந்துள்ள கட்டத்தில் எழுதவும்.
16. தேர்வு நேரம் தொடங்கும் சரியான நேரத்தில் தேர்வுக் கூடக் கண்காணிப்பாளர் வினாக்கள் அடங்கிய தொகுப்பினைத் திறக்கும்படி சொல்லும் வரையில் அதனைத் திறந்து பார்க்க அனுமதி இல்லை.
17. விடைத்தாளில் விடைகளை நிரப்பிக்காட்ட பென்சிலைக் கண்டிப்பாகப் பயன்படுத்தக் கூடாது. பென்சிலைக் கொண்டு ஏதாவது விடைகள் நிரப்பப்பட்டிருந்தால் விடைத்தாள் செல்லாததாகிவிடும்.
18. பொதுவாக ஒவ்வொரு வினாவுக்கும் (A), (B), (C), (D) மற்றும் (E) என்று குறிப்பிடப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட ஐந்து விடைகளில் ஒன்று மட்டுமே சரியான மற்றும் சிறந்த விடையாக இருக்கும். எனவே, சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த வினாவிற்குரிய சரியான வட்டத்தைப் பந்து முனைப் பேனாவால் நிரப்ப வேண்டும்.
19. ஒவ்வொரு கேள்விக்கும் ஒரே விடையை மட்டுமே குறித்துக் காட்ட வேண்டும். எந்தவொரு கேள்விக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட விடை குறித்துக் காட்டப்பட்டிருந்தால் அந்தக் கேள்வி மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.
20. ஒரு குறிப்பிட்ட கேள்விக்கு எந்த விடை மிகச் சரியானதாக இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களோ அவ்விடைக்குரிய வட்டத்தை முழுவதுமாக நிரப்ப வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வட்டம் நிரப்புதல் கூடாது.
21. அனைத்து விடைகளும் விடைத்தாளில் மட்டுமே குறிக்கப்பட வேண்டும். அதுவும், தொடர்புடைய வட்டங்களில் தான் குறிக்கப்பட வேண்டும்.
22. விடைத்தாளில் அடித்தல், திருத்தல் போன்றவற்றிற்கு அனுமதி இல்லை. அதனால் விண்ணப்பதாரர் ஒரு வினாவிற்கான விடையைச் சரியானதுதான் என்று உறுதி செய்து கொண்ட பின்னரே அவ்விடைக்கான வட்டத்தை பந்துமுனைப் பேனாவினால் முழுவதுமாக சரியாக நிரப்ப வேண்டும். விடைத்தாட்களை விடை மதிப்பீட்டுக் கருவிகளால் மதிப்பீடு செய்யப்படுவதால், அவற்றை அழிப்பான்கள், பிளேடுகள் ஆகியவற்றை உபயோகித்து சேதப்படுத்துதல் கூடாது.
23. விடைத்தாளில் விடைகளைத் தவிர எந்தவித குறிப்புகளை எழுதவோ, குறியீடுகளைச் செய்யவோ அனுமதியில்லை. எழுதிப் பார்த்துக் கொள்ள விரும்பும் (Rough Work) எதையும் விடைத்தாளில் எழுதக் கூடாது.
24. வினாத் தொகுப்பில் எந்தக் குறியீடுகள் செய்வதற்கோ எழுதிப் பார்த்துக் கொள்வதற்கோ அனுமதியில்லை. மேலும் எழுதிப் பார்ப்பதற்காகவோ அல்லது கணக்குகள் போட்டுப் பார்ப்பதற்காகவோ காகிதம் வைத்துக் கொள்வதற்கும் அனுமதியில்லை.
25. வினாத் தொகுப்பில் இதற்கென ஒதுக்கப்பட்ட இரண்டு பக்கங்களை rough work செய்ய பயன்படுத்திக் கொள்ளலாம்
26. விண்ணப்பதாரர்கள் பட்டியலில் உள்ளவாறு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அவர்களுடைய இருக்கையிலேயே தேர்வு முடியும் வரை அமர்ந்து இருக்க வேண்டும்.

27. குறிப்பேடுகளைக் கொண்டு வருதல் மற்றும் அதனைப் பார்த்து எழுதுதல் போன்ற செயல்களில் ஈடுபடுதல் கண்டிப்பாக தடை செய்யப்படுகிறது. இதனை மீறுபவர்கள் தேர்வுக் கூடத்தினின்றும் வெளியேற்றப்படுவதுடன் நடக்கின்ற மற்றும் பின்னாளில் நடக்கவிருக்கும் தேர்வுகளினின்றும் விலக்கி வைக்கப்படுவர்.

28. தேர்வுக் கூடத்தில் காபி, தேனீர், குளிர்பானங்கள் போன்றவை வழங்கப்படமாட்டாது. தேர்வுக் கூடத்திற்குள் அமைதியும் ஒழுங்கும் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். மற்ற விண்ணப்பதாரர்களுடைய பொருட்களையோ, கருவி பெட்டிகளையோ வாங்கக் கூடாது. அவரவர் தம்முடன் கொண்டு வந்துள்ள எழுதுகோல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பொருட்களை மட்டும் தான் உபயோகிக்க வேண்டும்.

29. விண்ணப்பதாரர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளக் கூடாது. தேர்வுக் கூடத்தில் விண்ணப்பதாரர் எவராது பேசிக் கொண்டிருக்கக் காணப்பட்டால் உடனே அவர்கள் தேர்வுக் கூடத்தை விட்டு வெளியேற்றப்படுவதோடு அவர்களது விடைத்தாள்களையும் செல்லாததாகிவிடும்.

30. தேர்வு எழுதி முடித்தவுடன் விடைத்தாளை (OMR Answer Sheets) தேர்வுக் கண்காணிப்பாளரிடம் திருப்பி கொடுத்து விட வேண்டும்.

31. தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டதினாலேயே விண்ணப்பதாரர் எந்தவொரு உரிமையையும் கோரத் தகுதி அற்றவராவார்.

32. விண்ணப்பதாரரால் விண்ணப்பத்தில் அளிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் விண்ணப்பதாரர் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த அனுமதி முற்றிலும் தற்காலிகமானது. விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தவறானது என்றோ, போலியாகத் தயாரிக்கப்பட்டதோ என பின்னர் தெரிய வருமாயின், அவரது விண்ணப்பதாரர் எனும் தகுதி எந்தவொரு முன்னறிவிப்பும் இல்லாமல் ரத்து செய்யப்படும். தவிரவும், எந்தவொரு போட்டித் தேர்வு எழுதுவதிலிருந்தும் அவ்விண்ணப்பதாரர் விலக்கி வைக்கப்படுவர்.

33. எழுத்துத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு, நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துக் கொள்ளாத பட்சத்தில் தெரிவு செய்யப்பட தகுதியற்றவர்களாவர்.

இணைப்பதிவாளர் / தலைவர்
மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்
திருவண்ணாமலை மண்டலம்